தினத் தந்தி
DAILY THANTHI
6 திருச்சி 17-5-2024

# திருச்சி இந்திய மேலாண்மையியல் நிறுவனத்தில் பயின்ற 363 பேருக்கு வேலை

திருச்சி, மே.17-

திருச்சி இந்திய மேலாண்மையியல் நிறுவனத்தில் பயின்ற மாணவ- மாணவிகளுக்கு சமீபத்தில் நடத்தப்பட்ட வளாக நேர்காணலில் 363 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளன. இது தொடர்பாக திருச்சி ஐ.ஐ.எம்.-ன் இயக்குனர் பவன் குமார்சிங் கூறுகையில், இந்த ஆண்டு நடத்தப்பட்ட வளாக நேர்காணலில் 140 நிறுவனங்கள் பங்கேற்றன. இதில், திருச்சி ஐ.ஐ.எம். கல்வி நிறுவனத்தில் பயின்ற 363 மாணவ- மாணவிகளுக்கு உயர் பதவி வேலைவாய்ப்பு கிடைத்துள்ளன. இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், வங்கி மற்றும் நிதி சார்ந்த நிறுவனங்கள், தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் என பல்வேறு நிறுவனங்கள் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளன. அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.43.69 லட்சம் என்ற ஊதியத்தில் எம்.பி.ஏ. பயின்ற மாணவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. எம்.பி.ஏ. மனிதவளம் பயின்றவர்களில் அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.29.86 லட்சம் என்ற வகையில் வேலை அளிக்கப்பட்டுள்ளது, என்றார்.

**Source : Daily Thanthi**

**Page No. : 06**

**Date : 17.05.2024**